**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.151/2025</u>**

**<u>நாள் : 13.03.2026</u>**

**எ.ம.சா.** 1 (1ஆம் எதிர்மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ஆனந்தகுமார் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு. சாமண்ணன் | வயது | : | 31 |
| ஊர் | : | பால்நாங்குப்பம் | தொழில் | : | டிரைவர் |
| வட்டம் | : | திருப்பத்தூர் | தேசியம் | : | இந்தியன் |

நான் வழக்கின் 1ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்கமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 1ஆம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமம் நகல் எ.ம.சா.ஆ.1

**<u>2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து சமயத்தில் TN 24 AB 3993 என்ற பொலிரோ பிக்கப் வாகனத்தை ஓட்டிச் சென்றேன் என்றால் சரிதான். அதன் உரிமையாளரும் நான்தான். எனக்கு எதிராகத்தான் விபத்து சம்பந்தமாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றால் சரிதான். எனது பொலிரோ பிக்கப் வாகனமானது விபத்திற்கு பின்னிட்டு மோட்டார் வாகன ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு ம.சா.ஆ.13 அறிக்கை

வழங்கப்பட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.13 ஆய்வறிக்கையில் எனது ஓட்டுநர் உரிமம் (DL) சமர்ப்பிக்கப்படவில்லை என்று கண்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மோட்டார் வாகன ஆய்வாளர் விசாரித்தபோது எனது ஓட்டுநர் உரிமம் நகலை கொடுத்தேன் என்று சாட்சி கூறுகிறார். விபத்து சம்பந்தமாக யுனைடெட் இந்தியா நிறுவனத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் அவர்களே வந்தார்கள். அவர்களிடம் எனது ஓட்டுநர் உரிமத்தை கொடுத்தேனா என்றால் ஆமாம். காப்பீட்டு நிறுவனத்தார் விசாரணையின்போது எனது ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு முந்தைய கட்டத்தில் எனது ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யாமல் தற்போது வழக்கிற்காக வேண்டிதாக்கல் செய்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் முன்பே ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்திருந்தால் எதிருரையில் அதை தெரிவித்திருப்பேன் என்றும் அவ்வாறு இல்லாததால்தான் ஓட்டுநர் உரிமம் இல்லை என்ற எதிர்வாதம் எழுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எனது ஓட்டுநர் உரிமத்தை 2014ல் வாங்கினேன். அது இருசக்கர வாகனத்திற்கானது என்றால் சரிதான். LMV ஓட்டுநர் உரிமத்தையும் 2014ல் வாங்கினேன். 2015ல் Transport vehicle–க்கான ஓட்டுநர் உரிமம் வாங்கினேன். எனவே விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தை ஓட்ட விபத்து தேதியில் எனக்கு செல்லத்தகு ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான்.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் ஊத்தங்கரையிலிருந்து திருப்பத்தூர் நோக்கி வந்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவரும் அதே திசையில்தான் வந்தார் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் திடீரென்று தார்ரோட்டிலிருந்து மண்ரோட்டிற்கு வந்தார் என்று வழக்கிற்காகவேண்டி தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரர்களின் தகப்பனார் சாலை விதிகளை பின்பறற்றி

சாலையின் இடது ஓரமாக சென்றுகொண்டிருந்த நிலையில் நான்தான் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் வாகனத்தை ஓட்டிவந்து இருசக்ர வாகனத்தின் பின்புறம் மோதி மனுதாரர்களின் தகப்பனாருக்கு இறப்பினை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் காரணம் என்றால் சரியல்ல. எனது வாகனம் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து தேதியில் எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றால் சரிதான். விபத்தில் இறந்துபோன செல்வத்தின் குடும்பத்தார்க்கு நானும், எனது காப்பீட்டு நிறுவனமும் தனியாகவும், கூட்டாகவும் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.